

# சிக்கலில் தமிழ் சினிமா!

## முற்றுகிறது பெப்ஸி பிரச்னை...



பண்டிகை கால போனஸ் வழங்கும் போது, தொழிற்சங்கத் தலைவரைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, போனஸ் சதவீதத்தைக் குறைத்துக் கொடுப்பார் முதலாளி. அப்போதுதான் வேலைக்குச் சேர்ந்த ஹீரோவின் பக்கத்தில் சில பேர் கொடி பிடிக்க, தொழிற்சாலைக்குள் போராட்டம் வெடிக்கும். ஏறக்குறைய தமிழ் சினிமாவின் அத்தனை ஹீரோக்களும் இது மாதிரியான ஒரு கதையில் நிச்சயம் நடித்திருப்பார்கள். இந்த முறை சினிமாவுக்கு வெளியே உண்மையாகவே கொடிப் பிடித்து நிற்கிறார்கள் பெப்ஸி சினிமா தொழிலாளர்கள்.